

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.09.2024) முகாம் அலுவலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.



துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனமானப் பேராசிரியர் அவர்களின் இல்லம் சென்று, இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன், பேரன் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.



துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்களை – நேற்று அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களை நேற்று அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### குஜராத் வெள்ளத்தில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த

# 26 நபர்களை தாயகம் அழைத்து வர முதல்வர் உத்தரவு!

## அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் துரித நடவடிக்கை!

சென்னை, செப்.30-

அயலகத் தமிழர் நலத் துறை செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 26 நபர்கள், குஜராத்தின் பாவ்நகருக்கு புனித யாத்திரை சென்று திரும்பும் போது 26.09.2024 அன்று, மலேஸ்ரீ ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அவர்கள் சென்ற பேருந்து சிக்கியது.

இச்செய்தி அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு 26 தமிழர்களையும் தமிழகம் அழைத்து வர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அயலகத் தமிழர் நலத்துறை அதிகாரிகள் குஜராத் மாநில நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் விளைவாக 26 தமிழர்களையும், குஜராத் மாநில நிருவாகம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் பாதுகாப்பாக மீட்டு, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்யப்பட்டு பாவ்நகரில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 26 தமிழர்களும் இரயில் மூலம் சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு 01.10.2024 அன்று காலை வந்தடைகின்றனர். சென்னை வந்தடையும் 26 தமிழர்களுக்கும் அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இவ்வாறு அயலகத் தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.

### ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. ஏற்பாட்டில்! கழக மகளிரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 100 வினாடி-வினா 2ம் சுற்றுப் போட்டி!

## எழுத்தாளர் கோ.வி. லெனின் ஒருங்கிணைத்து நடத்தினார்!

கோவை, செப்.30-

கோவை வரதராஜபுரம் சாய்விவாகா மகால் அரங்கில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக ஏற்பாட்டில்,கழக மகளிரணி சார்பில் நடைபெற்ற, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் 100 வினாடி வினா போட்டியின் 2 ஆம் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

கலைஞர் 100 வினாடி வினா போட்டி நிகழ்ச்சியை, எழுத்தாளர் கோ.வி. லெனின் ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில், கழக மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,

கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, கழக பிரச்சாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி,மாநில மகளிர் தொண்டரணி துணைச்செயலாளர் சத்யா பழனிகுமார்,மாநில ஆலோசனை குழு உறுப்பினர் மலர் மரகதம்,மாநில தீர்மானக்குழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ்,

மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ்,ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் அன்னம்மாள் ராஜா,கனிமொழி ஜெயலலிதா, கவிதா, ரங்கநாயகி,

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்,சிங்கை பகுதி 2 திமுக செயலாளர் சிங்கை மு.சிவா, பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி புஷ்பராஜ்,

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிரணி மகளிர் தொண்டரணி தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், பள்ளி, கல்லூரி மாணவ,மாணவிகள், வட்டக்கழகச் செயலாளர்கள், தி.மு.க. சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர். வினாடி வினா நிகழ்ச்சியில் திரளான கல்லூரி மாணவ -மாணவியர் கலந்து கொண்டனர். வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ -மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

### கிண்டி தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில்

# ரூ.8 கோடியில் எம்.ஆர்.ஐ. கருவி! 43 ஒப்பந்தப் பணியாளர்களுக்குப் பணி நியமன ஆணை!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, செப். 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.09.2024) சென்னை, கிண்டி, தேசிய முதியோர் நல மருத்துவமனை கூட்டரங்கில் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 43 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

பின்னர் இம்மருத்துவமனையில் ரூ.21.70 இலட்சம் மதிப்பிலான அவசர ஊர்தி சேவையினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை சந்தித்து நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**தேசிய முதியோர் நல மருத்துவ மையம்!**

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி சென்னை கிண்டியில் அமைந்துள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டது. தேசிய முதியோர் நல மருத்துவமனை இந்திய அளவில் இரு இடங்களில் அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டு டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவ மனையில் ஒரு வளாகத்தில் தேசிய முதியோர் நல மருத்துவமனை சிறிய அளவில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இந்தியாவில் பிரத்யேகமான முதியோருக்கான நல மருத்துவமனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் 8.64 ஏக்கர் பரப்பளவில் 3,76,358 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட இம்மருத்துவமனை தொடங்கப்பட்டது. இம்மருத்துவ மனையைப் பொறுத்தவரை இந்திய அளவில் செயல்படுகின்ற ஒரே முதியோர் நல மருத்துவமனை ஆகும்.

இம்மருத்துமவனையில் 200 படுக்கை வசதிகள் இருக்கின்றது. 40 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர் களின் வழிகாட்டுதலின்படி, கட்டணப் படுக்கை வசதிகள் அனைத்து மருத்துவமனைகளிலும் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை சென்னை, மதுரை, கோவை, சேலம், தஞ்சை போன்ற பல்வேறு மாவட்டங்களில் கட்டணப் படுக்கை அறைகளை தொடர்ந்து தொடங்கி வைத்து வருகிறோம்.

இந்த தேசிய முதியோர் நல மருத்துவமனையிலும் 20 கட்டணப் படுக்கை அறைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதில் மிக மிக குறைந்த கட்டணமாக நாளொன்றுக்கு ரூ.900/- என்கின்ற வகையில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் மருத்துவ மனை என்பதால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.900/- கட்டணத்தில் உணவு வசதிகளும் இதில் அடங்கும். மேலும் இம்மருத்துவ மனையில் 24 மணிநேரமும் உள்நோயாளிகள் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு பயன்பாட்டில் இருந்து வருகிறது. முதியோருக்கென அறுவை சிகிச்சை பிரிவு தொடங்கியிருக்கிறது. இருதய மருத்துவப் பிரிவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

சிறுநீரக மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பிரிவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இரைப்பை மற்றும் குடல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், முடநீக்கியல் பிரிவு, முதியோர் மனநல மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை பிரிவு, பல் மருத்துவம், இயன்முறை மருத்துவம், ஆயுஷ் போன்ற பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் இங்கு வருகின்ற முதியோர்களுக்கு வயது முதிர்வின் காரணமாக சிகிச்சை பெற வருபவர்கள், மாலை நேரங்களில் குறிப்பாக ஓய்வு நேரங்களில் புத்தகங்கள் படிப்பதற்குரிய வசதியாக நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல் பழங்காலத்து விளையாட்டு என்கின்ற வகையில் பல்லாங்குழி போன்ற விளையாட்டு உபகரணங்களும், கேரம் போர்டு, செஸ் போன்ற விளையாட்டு சாதனங்களும் இம்மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் கடந்து கடந்த 2 மாதங்களுக்கு முன்னாள் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவு ஒன்று ஜீன் திங்கள் 11ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இம்மருத்துவமனயில் முதியோருக்கான பிரத்யேக சேவையில் மிகச் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

**ரூ.8 கோடி மதிப்பிலான எம்.ஆர்.ஐ. பரிசோதனை கருவி!**

இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் பொறுத்தவரை 60 பணியிடங்கள் நிரந்தரம் (Regular) என்கின்ற வகையிலும், 216 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நியமிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அந்தவகையில் 276 பணியிடங்களை முழுவதுமாக நிரப்புவதற்குரிய பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தவகையில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் தேந்தெடுக்கப்பட்ட செவிலியர்கள் இம்மருத்துவமனையில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்று 43 ஒப்பந்த பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் தரப்பட்டிருக்கிறது. Clinical Physiotherapist, Lab technician, Pharmacist, Date Entry Operator, Steno மற்றும் Typist, Occupational Theraphy, Lab attend, OT technician, ECG Technician போன்ற பல்வேறு தொழில்நுட்ப பணியாளர்கள் என 43 பேருக்கு ஒப்பந்த பணிநியமனங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் இம்மருத்துவமனையில் இருந்து அவசர தேவைகளுக்கு மாற்று மருத்துவமனைகளுக்கு முதியோர்களை அழைத்து செல்வதற்கு வசதியாக ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் அவசர ஊர்தி சேவை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை தொடங்கி கடந்த 8 மாதங்களில் மட்டும் சென்னை மட்டுமல்லாமல் விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் போன்ற பல்வேறு மாவட்டங் களிலிருந்தும் இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். புற நோயாளிகளைப் பொறுத்தவரை 1,11,918 பேர் மருத்துவச் சேவையினைப் பெற்றிருக்கிறார்கள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



ஈரோடு தெற்கு மாவட்டம், ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழக புதிய அலுவலகத்தை ஒன்றியச் செயலாளர் வி.ராஜா தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி கழகக் கொடியேற்றி திறந்து வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், பி.எல்.ஏ.2, பூத் கமிட்டி உறுப்பினர்கள் கழக உடன்பிறப்புக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சி பொதுநிதி மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தலைவர்கள் நினைவு பூங்கா, ஜல்லிக்கட்டு நினைவு சதுக்கம், நீரூற்று பூங்கா சந்திப்பு, அசோகா ஸ்தூபியை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன் தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் கே.ஈஸ்வரசாமி, செ.வேலுச்சாமி, மகாலட்சுமி முருகன், சு.கலைராஜன் உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.